இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 27-09-2024

# புதிய அதிபரின் முதல் பணி

இலங்கை நாட்டின் புதிய அதிபராக அனுர குமார திசநாயக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இந்திய மீனவர்களைக் காப்பதை அவர் தனது முதல் பணியாகக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதும் கைது செய்யப்படுவதும் காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

அதற்கு இதுவரை முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. நாளிதழ்களில் தினம் மீனவர் செய்தி இடம் பிடித்துவிடும் சோகத்தைக் காண்கிறோம். துடிக்கிறோம்.

மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 37 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கடந்த 21-9-2024 அன்று சிறைப்பிடிக்கப்பட்டு உள்ளனர். தரங்கம்பாடி, பூம்புகார், கொள்ளிடம், பழையாறு ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்கள் இந்த மீனவர்கள்.

**“சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களிடம் அதிக அளவில் அபராதம் வசூலிப்பதைத் தடுத்திட வேண்டும். மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்கிடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்”** என்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு 23-9-2024 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

**இந்த ஆண்டு ஜூன் - செப்டம்பர் காலகட்டத்தில் மட்டும் 160 மீனவர்களை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது. கைது செய்வது அல்லது கடற்படை ரோந்துப் படகை மீனவர் படகு மீது மோத விட்டு அதனை மூழ்கடிப்பது தொடர்ந்து வருகிறது. வலைகளை நாசப்படுத்துகிறார்கள். பிடித்து வைத்திருக்கும் மீன்கள் திருடப்படுகின்றன. இவை அனைத்தும் கேட்பார் இல்லாமல் நடக்கிறது.**

2010ஆம் ஆண்டு முதல் பல கட்டங்களாக இரண்டு நாட்டு மீனவர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. ஆனால் அவை அதன் பிறகு தொடரவில்லை.

2016 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை மீனவர் இடையே அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. 2016 ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் நாள் அன்றைய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இலங்கையின் அமைச்சர்கள் மங்கள சமரவீர, மஹிந்த அமரவீர ஆகியோர் முன்னிலையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. ஒவ்வொரு மூன்று மாதத்துக்கு ஒருமுறை மீனவர்கள் சந்திப்பது என்றும், ஒவ்வொரு ஆறு மாதத்துக்கு ஒருமுறை இருநாட்டு அமைச்சர்கள் சந்தித்துப் பேசுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. இருநாட்டு கடற்படை அதிகாரிகளும் இதில் இடம் பெறுவார்கள் என்று சொல்லப்பட்டது.

**இந்தக் குழுவின் முதல் கூட்டம் 2017 ஜனவரி 2 ஆம் நாள் கொழும்புவில் நடைபெற்றது. மீனவர்கள் மீது எந்த வன்முறையும் செலுத்தக் கூடாது, உயிர் இழப்புகள் ஏற்படக் கூடாது என்று இக்கூட்டத்தில் மீனவர்கள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதனை இலங்கை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டது. ஆனாலும் இலங்கைக் கடற்படையால் அடக்குமுறை தொடர்ந்தே வருகிறது.**

திடீரென இலங்கையில் வெளிநாட்டு மீன்பிடி தடைச் சட்டம் 2018 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அதன்பிறகு பேச்சுவார்த்தையும் நின்று போனது. இச்சட்டத்தின்படி மீனவர்களை கைது செய்து சிறையில் அடைக்கலாம், கோடிக்கணக்கான ரூபாய் அபராதம் விதிக்கலாம். இந்த சட்டத்தை வைத்துத்தான் கொடுமைகள் அரங்கேறுகின்றன.

**இலங்கைக் கடற்படையால் கைதான தூத்துக்குடி தருவை குளத்தைச் சேர்ந்த மீனவர்கள் 10 பேருக்கு 3.50 கோடி ரூபாய் அபராதமும் 6 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.**

இந்திய அரசின் தரப்பில் வெளியுறவுத்துறை, மீன் வளத்துறை அதிகாரிகள் நான்கு பேரும், இலங்கை அரசின் தரப்பில் நான்கு பேரும் இணைந்து குழு அமைத்து இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு வருகிறோம் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சொன்னாரே தவிர எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

**இத்தகைய சூழலில் சிங்களவர் - தமிழர்கள் - இசுலாமியர் ஒற்றுமை குறித்து பேசும் இடதுசாரி அரசு இலங்கையில் ஆட்சிக்கு வந்துள்ளது. இந்தப் புதிய அரசானது இந்திய மீனவர்கள் படும் துன்ப துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.**

மிகக் கொடூரமான விதிமுறைகள், தண்டனைகள் அடங்கியுள்ள 2018 ஆம் ஆண்டுச் சட்டத்தை இலங்கை அரசு முதலில் நீக்க வேண்டும். இலங்கைக் கடற்படையின் தொடர் தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இந்திய மீனவர்களின் மீன்பிடித் தொழில் என்பது ‘குற்றச் செயல்’ அல்ல. அதனைக் குற்றச் செயலாகக் கருதி தண்டனைகள் வழங்கக் கூடாது. இந்திய மீனவர்களைக் கைது செய்வதையும், அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதையும் இலங்கை அரசாங்கத்தின் பெருமை மிகு செயலாகக் கருதக் கூடாது.

**இந்திய - இலங்கை மீனவர்கள் இடையிலான மோதலைப் போல இதனை மாற்ற முனையக் கூடாது. இரு நாட்டு மீனவர்களுக்குள் நட்பை பலப்படுத்த அரசுகள் முனைய வேண்டும்.**

இலங்கை சிறையில் இருக்கும் அனைத்து மீனவர்களும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட படகுகள் அவர்களுக்கு உடனடியாக திரும்பவும் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர்கள் மீதான அனைத்து வழக்குகளும் ரத்து செய்யப்பட வேண்டும்.

2014 முதல் இந்த பத்தாண்டு காலத்தில் இலங்கைக் கடற்படையினரால் 3 ஆயிரத்து 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களின் 534 படகுகள் இலங்கை அரசாங்கத்தால் கடத்தப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக 2023 ஆம் ஆண்டு என்பது தமிழக மீனவர்களுக்கு மிக மோசமான ஆண்டு ஆகும். அந்த ஆண்டு மட்டும், இலங்கைக் கடற்படையினர் 243 மீனவர்களைக் கைது செய்துள்ளார்கள். 37 படகுகளை பறிமுதல் செய்துள்ளார்கள். 2024 ஆம் ஆண்டும் இது தொடர்கிறது. **இந்தக் கொடுமைக்கு இலங்கையின் புதிய அதிபர் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.09.2024) தலைமைச் செயலகத்தில், முன்னாள் முதலமைச்சர் தமிழவேள் பி.டி. ராஜன் அவர்களின் 50வது நினைவு ஆண்டை முன்னிட்டு “தமிழவேள் பி.டி. ராஜன் நினைவுகளில் 50” என்ற டிஜிட்டல் சிறப்பு மலரை வெளியிட்டார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் சிறப்பு மலர் தொகுப்பாளர் சிவப்பிரகாசம் ஆகியோர் உள்ளனர்.






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.09.2024) தலைமைச் செயலகத்தில், 2023–24 ஆம் ஆண்டிற்கான பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் சிறந்த கைத்தறி நெசவாளர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட 6 விருதாளர்களுக்கு பரிசுத்தொகையாக 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், சிறந்த வடிவமைப்பாளர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட 3 வடிவமைப்பாளர்களுக்கு பரிசுத்தொகையாக 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், போட்டி தேர்வு மூலம் சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட 3 வடிவமைப்பாளர்களுக்கு பரிசுத்தொகையாக 2.25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறித்துறை இயக்குநர் அ.சண்முக சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரத்தில் செப்.28 -ஆம் தேதி நடைபெறும் கழக பவள விழாவிற்கு

# காஞ்சிபுரம் வடக்கு - தெற்கு மாவட்டங்களில் இருந்து கழகத்தினர் திரண்டு வாரீர் !

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!





*காஞ்சிபுரம், செப். 27 -*

கழக பவள விழாவைக் கொள்கை கூட்டணியுடன் கொண்டாடுவோம் கழக உடன் பிறப்புக்கள் அனைவரும் அண்ணா பிறந்த மண்ணில் அணிவகுப்போம் என்று தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்ற, காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில், நாளை (செப்டம்பர் 28ஆம் தேதி) மாலை நடைபெறும் கழக பவள விழாவில் காஞ்சிபுரம் வடக்கு தெற்கு மாவட்டத்தில் இருந்து மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பகுதி பேரூர் வார்டு கிளை கழக நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் நிர்வாகிகள் கழக செயல் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் ஆயிரக்கணக்கில் அலைகடலென ஆர்ப்பரித்து திரண்டு வரவேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா. மோ. அன்பரசன் மற்றும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் ஆகியோர் இணைந்து அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட “திராவிட முன்னேற்றக் கழகம்” என்ற பேரியக்கம், அண்ணாவின் கொள்கைத் தம்பிகளால் வளர்க்கப்பட்டு அவரது தம்பிகளில் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு,

நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக இயங்கி கொண்டிருக்கிற வேளையில் இன்றைக்கு தி.மு.கழகம் பவள விழா ஆண்டை நிறைவு செய்கிறது.

75 ஆண்டுகளை கடந்து பவள விழாவை நிறைவு செய்துள்ள தி.மு.கழகம் என்ற பேரியக்கம் வெற்றி தோல்விகளை கடந்து, தனது இலட்சியப் பாதையில் உறுதி குலையாமல் பயணித்து வரும் தி.மு.கவுக்கு எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, முதுகு வளையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, “நான் தி.மு.க.காரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு, தளபதியின் அன்புத் தொண்டன்” என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத் தொண்டர்களின் அடையாளம்.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75வது ஆண்டினை பவள விழாவாக கழக முப்பெரும் விழாவுடன் சேர்ந்து கடந்த 17ஆம் தேதி சென்னை நந்தனத்தில் கழக குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்தோம்.

வெற்றி மேல் வெற்றிகளை குவித்து வரும் நம்முடைய ஒப்பாரும் - மிக்காரும் இல்லா அன்புத் தலைவர் - தளபதி அவர்கள் நம் உயிரான கழகத்துடன் இணைந்து கொள்கை கூட்டணி அமைத்துள்ள இயக்கத்தினையையும் இணைத்து பேரறிஞர் பெருந்தகை பிறந்த காஞ்சி மண்ணில் கழக பவள விழாவை கொண்டாடிட வேண்டும் என்று பெரு மகிழ்ச்சியுடன் அறிவித்தார்.

நம்முடைய உயிரனைய தலைவர் அவர்களின் அன்பு கட்டளைக் ஏற்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகமும் - தெற்கு மாவட்ட கழகமும் இணைந்து அண்ணா பிறந்த புனித பூமியில் - அண்ணா பயின்ற பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் அமைந்துள்ள விளையாட்டு திடலில் நாளை (28ஆம் தேதி சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் கழக கொள்கை கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்க உள்ள மாபெரும் கழக பவள விழா பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாநகரில் தி.மு.க கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்கும் தி.மு.கழக பவளவிழா பொதுக்கூட்டத்தை, காஞ்சிபுரம் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. இணைந்து, பார்ப்போர் அனைவரும் வியக்கும் வகையில் மிகவும் பிரம்மாண்டமான மேடை அமைத்து எழுச்சியுடன் மாநாடு போல நடத்த ஏற்பாடுகள் செய்து உள்ளோம்.

மிகவும் கோலாகலமாக நடைபெற உள்ள தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் அனைவரும் பங்கேற்கும் கழக பவள விழா மாபெரும் பொதுக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு - தெற்கு மாவட்டத்தில் இருந்து மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த கழகத்தினரும் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென அணிதிரண்டு வந்து பங்கேற்றிட வேண்டும் என்று இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கிறோம்.

கழக பவள விழாவைக் கொள்கை கூட்டணியுடன் கொண்டாடுவோம் ! கழக உடன் பிறப்புக்கள் அனைவரும் அண்ணா பிறந்த மண்ணில் அணிவகுப்போம் !! என்று நம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் முதல்வர் கழகத் தலைவர் அவர்கள் அனைவரும் வாரீர் வாரீர் என்று வாஞ் சையுடன் அழைத்துள்ளார்.

இக்கொள்கை கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து, 40 க்கு 40 என்று நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றது போல, வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200+ தொகுதிகளில் வெற்றியினை உறுதி செய்திட செப்டம்பர்28 அண்ணன் பிறந்த காஞ்சியில் நடைபெறும் கழக பவள விழாவில் காஞ்சிபுரம் வடக்கு தெற்கு மாவட்ட கழகத்தினர் காஞ்சி மாநகரமே குலுங்கிடும் வகையில், கொள்கைத் தீரர்களாக கழக கொடி ஏந்தி ஆயிரக்கணக்கில் பெரும் படையாக திரண்டு வந்து, எதிர் வரும் சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கு அச்சாரமாக திகழும் வகையில், இப்பவள விழாவை வெற்றியடைய செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் - முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் கொள்கை கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்துள்ள இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துக்கொள்ளவது, “நமது உரிமை” - “நமது கடமை” என்ற அந்த உணர்வோடு, காஞ்சிபுரம் வடக்கு - தெற்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத் தோழர்கள் அனைவரும், செப்டம்பர் 28ஆம் தேதி சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கெல்லாம் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலுக்கு அணி அணியாக திரண்டு வந்து பங்கேற்று சிறப்பிக்கும் படி இருகரம் கூப்பி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் .

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற பேரறிஞர் அண்ணாவின் வைர வரிகளுக்கு ஒப்பாக அண்ணன் பிறந்த காஞ்சி மாநகரில் இதுவரை, இதுபோன்ற பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது இல்லை என்று தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் சரித்திர சாதனையை படைத்திடும் வாரீர் வாரீர் என்று அகமகிழ்ந்து அழைக்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.



தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட, இ.பி. காலனியில், தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் மாநகராட்சிக்கு உட்பட்ட சாலை ஓரங்களில் 20,000 மரக்கன்றுகள் நடும் பணியினை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி அண்ணா பேருந்து நிலையத்தில், வருகிற அக்டோபர் 3ஆம் தேதியில் இருந்து 13 ஆம் தேதி வரை நடைபெற இருக்கும் தூத்துக்குடி புத்தகத் திருவிழா, நெய்தல் கலைவிழா, புகைப்படக் கண்காட்சி ஆகியவற்றை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேருந்துகளின் முன்பகுதியில் ஒட்டு வில்லைகளை ஒட்டினார். உடன் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான பெ.கீதாஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன், பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.